# RPL

## விண்ணபத்தினை மேற்கொள்வதற்கான வழிகாட்டி

கணிப்பீட்டு தர உத்தரவாத பிரிவு

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு

# 1.0 அறிமுகம்

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மற்றும் 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க திருத்தப்பட்ட மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி சட்டமூலத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நாட்டின் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் (TVET) துறைசார் ஒழுங்கமைக்கும் அமைப்பாக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் இவ் ஆணைக்குழுவினால் TVET பயிலுநர்களுக்கான சான்றளிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தேசிய தொழிற்தகைமை (NVQ) சட்டகத்தின் அறிமுகத்துடன் கீழே தரப்பட்டுள்ள வழிமுறைகளில் NVQ சான்றிதழ்கள் விருதளிக்கப்படுகின்றன.

- தேர்ச்சி அடிப்டையிலான பயிற்சி (CBT)
- முன்னைய அனுபவத்தினை அங்கீகரித்தல்(RPL)
- தொழிற்துறை அடிப்படையிலான பயிற்சி (EBT)

மேலும், TVEC ஆனது நெகிழ்ச்சியான கற்றல் முறை (FLM) இல் தேர்ச்சி பெறும் நபர்களுக்கு அடைவுக்கான அறிக்கை (RoA) சான்றிதழ் வழங்கலை ஆரம்பித்துள்ளது. தற்போது இக் கற்றல் முறை மூலம் தொழிற்துறைகளில் வேலை புரியும் நபர்கள் விடய அடிப்படையிலான (modular based) குறுகிய கால பாடநெறிகளைப் பயின்று “நனோ தகைமைகளை” பெற்றுக்கொள்ளமுடியும்.

முன்னைய அனுபவத்தினை அங்கீகரித்தல் (RPL) என்பது பயிலுநர் முறைசார் அல்லது முறைசாரா பயிற்சி மற்றும் கல்வி, வேலை அனுபவம் அல்லது பொது வாழ்க்கை அனுபவம் ஆகியவற்றின்

சேர்க்கையினால் பெற்றுக்கொண்ட தற்போதைய தேர்ச்சிகளை அங்கீகரித்தலாகும்.

வெளிநாடுகளிற்கு சென்று மீண்டும் நாடு திரும்பியுள்ள பணியாளர்கள் மற்றும் வெளிநாடுகளிற்கு செல்வதற்கு தயாராக உள்ளவர்கள் ஆகியோர் உள்ளடங்கலாக அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கியதாக ஓர் கூடுதலான எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களுக்கு குறுகிய காலப்பகுதியில் NVQ தகைமைகளை விருதளிக்கும் நோக்கில் விண்ணப்பதாரர்களின் திறன் மட்டங்களை அளவிடுவதற்காக RPL விண்ணப்பங்களை பரிகரிப்பு செய்யும் முறைமையினை டிஜிட்டல் மயமாக்கியுள்ளது. அத்துடன், இலத்திரனியல் முறைமை (e-RPL System) என அழைக்கப்படும் இச் செயற்பாட்டினை மேற்கொள்ளும் அதிகாரம் பலதரப்பட்ட நிறுவகங்களிற்கு (e-RPL நடைமுறைப்படுத்துநர்) அளிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்திலிருந்தே, எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளும் இல்லாத பல இலங்கையர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளின் நிமித்தம் பல்வேறுபட்ட நாடுகளிற்கு சென்று அங்கு தொழில்களைப் புரியும் காலப்பகுதியில் திறன்கள், அறிவு மற்றும் ஆற்றல்கள் ஆகியவற்றினைப் பெற்றுள்ளனர். அத்துடன் அவர்களது வெளிநாட்டு அன்னிய செலாவணி நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பெரும் பங்கினை ஆற்றுகின்றது.

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு மீண்டும் வருகை தந்துள்ள இலங்கையர்களிடத்தில் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று காணப்படாத நிலையில் அவர்களால் வங்கிக் கடன்களைப் பெறுதல், சுயதொழில்களை ஆரம்பித்தல் மற்றும் மீண்டும் வெளிநாடுகளிற்குப் புலம்பெயர்தல் போன்ற பல செயற்பாடுகள் தொடர்பாக இன்னோரன்ன சவால்களை எதிர்நோக்குகின்றனர்.

இந் நிலையில், RPL பரிகரிப்பு முறைமை தொடர்பாக பதிவு செய்தல் முதல் சான்றளிப்பு வரையிலான நடைமுறைகள் மற்றும் காணப்படும் வசதிகள் ஆகியவை தொடர்பான ஓர் பரந்தளவிலான தகவல்களை வழங்கும் முகமாக வாடிக்கையாளர்கள் இலகுவான முறையில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக e-RPL வழிகாட்டியானது தயாரிக்கப்பட்டுள்ளது.

# 2.0 ஈடுபடும் நபர்கள் மற்றும் அவர்களது தகைமைகள்



## 2.1 ஆகக் குறைந்த வயது

NVQ மட்டம் 02 மற்றும் 03 தொடர்பான ஆகக் குறைந்த வயதெல்லைகள் பின்வருமாறு

- NVQ மட்டம் 02 மற்றும் 03 - 18 வயது
- NVQ மட்டம் 04 - 21 வயது

## 2.2 விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்

நபரொருவர் தற்போது ஈடுபட்டுள்ள தொழில்கள் தொடர்பாக RPL முறை ஊடாக ஏேஞ இனைப் பெற்றுக்கொள்ள முடியும் அத்துடன் ஒரு வருடத்திற்கும் கூடிய காலப்பகுதியில் சம்பந்-தப்பட்ட தொழிலில் ஈடுபடவில்லையாயின் (தற்போது இல்லை) RPL முறை ஊடாக NVQ இனைப் பெற்றுக்கொள்ள அவருக்கு விண்ணப்பிக்க முடியாது.

## 2.3 தொழிற்துறை / வேலை அனுபவம்

NVQ மட்டம் 03 மற்றும் 04 ஆகியவற்றினைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான தொழில் அனுபவங்கள் பின்வருமாறு.

## NVQ மட்டம் 02 மற்றும் 03

1. சுய தொழில் புரிவோர் - 1 1/2 வருட தொழில் அனுபவத்திற்கான கிராம சேவகரின் சேவை சான்றிதழ்
2. முறைசார் நிறுவகங்களில் தொழில்புரிவோர் - 1 1/2 வருட தொழில் அனுபவத்திற்கான தொழில்வழங்குநரின் சேவை சான்றிதழ்
3. வியாபாரப் பெயர்ப் பதிவினைக் கொண்டுள்ள சுயதொழிலாளர்கள் - 1 1/2 வருட தொழில் அனுபவத்திற்கான வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழ் (அனுபவத்திற்கான வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழ் 1 1/2 வருடத்திற்கும் பழமையானது)

## NVQ மட்டம் 04

1. NVQ மட்டம் 02/ 03 இனை பெற்றுக்கொண்ட நபர்கள் - NVQ மட்டம் 02/ 03 இனைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் 02 வருடங்கள் சேவையாற்றியிருத்தல் மற்றும் பொருத்தமாயின் அறிவுசார் கணிப்பீட்டில் (KA) சித்தியெய்தியிருத்தல்
2. நேரடியாக விண்ணப்பித்தல் - கிராம சேவையாளரினால் அல்லது தொழில்வழங்குநரினால் வழங்கப்பட்ட 04 வருட சேவை அனுபவத்திற்கான சேவை சான்றிதழ் மற்றும் பொருத்தமாயின் அறிவுசார் கணிப்பீட்டில் (KA) சித்தியெய்தியிருத்தல்

TVEC நிறுவகத்தில் பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிறுவகங்களிலிருந்து/ NAITA இன் பயிலுநர் பயிற்சிக்கான NVQ அல்லாத சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டுள்ள நபர்களின் பொருட்டு கீழே தரப்பட்டவாறு பயிற்சிக் காலங்களின் அடிப்படையில் அவர்களுக்கான தொழில் அனுபவங்கள் குறைவடைந்து செல்கின்றன.

| பயிற்சிக் காலம் | NVQ மட்டம் 02 மற்றும் 03 இற்குத் தேவைப்படும் காலப்பகுதி | NVQ மட்டம் 04 இற்குத் தேவைப்படும் காலப்பகுதி |
|---|---|---|
| 6 - 1மாதங்கள் | 1 வருடம் | 3 வருடங்கள் |
| 12 - 24 மாதங்கள் | 09 மாதங்கள் | 2 வருடங்கள் |
| 24 - 36 மாதங்கள் | 06 மாதங்கள் | 1 1/2 வருடங்கள் |

## 2.4 புலம்பெயர் தொழிலாளர்களுக்கான அடிப்படைத் தகைமைகள்

புலம்பெயர் தொழிலாளர்கள் அவர்களது தொழில் அனுபவங்களுக்கு பொருத்தமான பின்வரும் சான்றுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் மற்றும் பொருத்தமாயின் அறிவுசார் கணிப்பீட்டில் (KA) சித்தியெய்தியிருத்தல் வேண்டும்

- கடவுச் சீட்டு மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்
- VISA பக்கங்கள் அல்லது தொழில் அனுமதிப் பத்திரங்களன் பிரதிகள் (work permit copies)
- வெளிநாடுகளிலுள்ள தொழில்வழங்குநர்களினால் சான்றுப்படுத்தப்பட்ட தொழில் அனுபவ சான்றிதழ்கள்



# 3.0 போட்போலியோ (portfolio) இனைத் தயாரித்தல்

கணிப்பீடுகள் சான்றுகள் மற்றும் NVQ சட்டகம் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. பொதுவாக பயிலுநர்களின் தேர்ச்சியினை கணிப்பீடு செய்வதற்கு NVQ கணிப்பீட்டாளர்கள் 16 வகையான சான்றுகளைப் பயன்படுத்துகின்றனர்.

ஆகவே, விண்ணப்பதாரிகள் தமது தொழில் அனுபவ காலப்பகுதியிற்கான பொருத்தமான ஆவண சான்றுகள் உள்ளடங்கலாக ஏனைய சான்றுகளையும் உள்ளடக்கிய சான்று போட்போலியோவினைத் தயாரித்தல் வேண்டும். இறுதியில் NVQ கணிப்பீட்டாளர்களால் விண்ணப்பதாரிகளின் தேர்ச்சி மட்டங்களை தீர்மானிப்பதற்கு இவை பயன்படுத்தப்படும். பின்வரும் வழிமுறைகளில் உமக்கான போட்போலியோவினைத் தயாரித்துக் கொள்ளமுடியும்.

**1. சுய விபரக் கோவை (Curriculum Vitae)**

(உமது சுயவிபரக் கோவையினை சுய தகவல்கள், கல்வி மற்றும் தொழிற் தகைமைகள், தொழில் அனுபவங்கள் மற்றும் ஏனைய தகைமைகள் ஆகியவற்றினை உள்ளடக்கித் தயாரிக்கவும்)

**2. கல்வி/ தொழிற் சான்றிதழ்கள் (தயவுசெய்து சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்கவும்)**

2.1 கல்வி சான்றிதழ்கள்

2.2 தொழிற் சான்றிதழ்கள்

**3. சேவைகள் (தயவுசெய்து சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்கவும்)**

விண்ணப்பதாரி அரச/ தனியார் துறையில் தொழில்வாய்ப்புகளில் ஈடுபடுவாராயின்:

3.1 நியமன கடிதங்கள்

3.2 சேவை சான்றிதழ்கள்

3.3 பதவியுயர்வு கடிதங்கள்

வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளில் ஈடுபடுவாராயின்:

3.4 கடவுச்சீட்டு தகவல் பக்கம் மற்றும் தொழில் விசா பிரதி

3.5 உரிய அதிகாரசபையினால் சான்றுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு சேவை சான்றிதழ்கள்

விண்ணப்பதாரி சுயதொழிலாளராயின் :

3.1 வியாபாரப் பெயர்ப்பதிவுச் சான்றிதழ் (BR)

3.2 தொழில்முயற்சி அனுபவங்கள் தொடர்பான ஓர் ஆதாரமாக வியாபார பரிமாற்றல் ஆவணங்கள்

**4. விருதுகள் அல்லது அங்கீகாரங்கள் (தயவுசெய்து சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்கவும்)**

4.1 சேவை பாராட்டுதல் கடிதங்கள்

4.2 சேவை விருதுகள்

**5. அமைய வேலை (தயவுசெய்யது சான்றுகளின் அல்லது பாராட்டுதல் கடிதங்களின் பிரதிகளை இணைக்கவும்)**

**6. நீர் விண்ணப்பித்துள்ள தொழில்சார் அலகுகளின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட வேலைகள்/ திட்டங்கள்/ ஒப்படைகள் ஆகியவை தொடர்பான ஆவணங்கள் (உரிய தேசிய தேர்ச்சி நியமங்களை வஏநுஊ இணையத்தளமான www.tvec.gov.lk இல் பார்வையிடமுடியும்). உதாரணமாக, பராமரிப்பாளர் (caregiver) NVQ மட்டம் 04 இற்கான அலகுகளைக் கீழே பார்வையிடமுடியும்.**

| No. | Units | Code No. | Compulsory/Optional |
|---|---|---|---|
| 1. | Maintain the relationship with the client | N85S010U01 | Compulsory |
| 2. | Attend domestic affairs of the client | N85S010U02 | Compulsory |
| 3. | Prepare living area of the client | N85S010U03 | Compulsory |
| 4. | Maintain personal hygiene and appearance of the client | N85S010U04 | Compulsory |
| 5. | Maintain nutrition of the client | N85S010U05 | Compulsory |
| 6. | Provide drug treatment | N85S010U06 | Compulsory |
| 7. | Check and record vital signs | N85S010U07 | Compulsory |
| 8. | Care of an elderly person | N85S010U08 | Compulsory |
| 9. | Care of postnatal mother & new born | N85S010U09 | Compulsory |
| 10. | Care of an infant/ toddler | N85S010U10 | Compulsory |
| 11. | Care of the child | N85S010U11 | Compulsory |
| 12. | Care of a client with special needs | N85S010U12 | Compulsory |

**Qualification for National Vocational Qualifications (NVQ)**

| Qualification Package | Description | Package Level | Units for Package |
|---|---|---|---|
| N85S010Q1L3 | Care Giver | L3 | U01 + U02 + U03 + U04 + U05 |
| N85S010Q2L4 | Care Giver (Elderly Care) | L4 | U01 + U02 + U03 + U04 + U05 + U06 + U07 + U08 |
| N85S010Q3L4 | Care Giver (Maternal and child care) | L4 | U01 + U02 + U03 + U04 + U05 + U06 + U07 + U09 + U10 + U11 |
| N85S010Q4L4 | Care Giver (Client with special needs) | L4 | U01 + U02 + U03 + U04 + U05 + U06 + U07 + U12 |
| N85S010Q5L4 | Care Giver | L4 | U01 + U02 + U03 + U04 + U05 + U06 + U07 + U08 + U09 + U10 + U11 + U12 |



# 4.0 ந-சீடு நடைமுறைப்படுத்துநர்கள்

| நிறுவகம் | விண்ணப்பங்களை சமர்ப்பிக்கக்கூடிய தொழில்கள் | தொலைபேசி இல | ஈமெயில் முகவரிகள் |
|---|---|---|---|
| **தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை (NAITA)** | அனைத்து விண்ணப்பதாரிகள் | 0112 888 782 | info@naita.gov.lk |
| **தொழிற்பயிற்சி அதிகாரசபை (VTA)** | அனைத்து விண்ணப்பதாரிகள் | 011 727 0270 | cgjp@vtasl.gov.lk |
| **தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் (DTET)** | அனைத்து விண்ணப்பதாரிகள் | 011 242 1580 | info@dtet.gov.lk |
| **இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் (SLITHM)** | சுற்றுலா மற்றும் ஹோட்டல் துறைசார் தொழில்கள் | 011 238 2213 | info@slithm.edu.lk |
| **இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் (OCUSL)** | மீன்பிடி மற்றும் நீரியல்சார் தொழில்கள் | 0114 346 979 | admin@ocu.ac.lk |

| நிறுவகம் | விண்ணப்பங்களை சமர்ப்பிக்கக்கூடிய தொழில்கள் | தொலைபேசி இல | ஈமெயில் முகவரிகள் |
|---|---|---|---|
| **தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம் (NIPM)** | பெருந்தோட்டத் துறைசார் தொழில்கள் | 011 277 0232 | info@nipm.gov.lk |
| **தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை (NWSDB)** | குழாய் பொருத்துதல் தொடர்பான தொழில்கள் | 011 222 4888 | nwsdbch@sltnet.lk |

- நடைமுறைப்படுத்தும் முகவர்களின் தொடர்பு இலக்கங்கள் மற்றும் முகவரிகளை TVEC இன் இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.



# 5.0 மொடியூல்/ பாடநெறிகள் தொடர்பான இடைவெளிகளை நிரப்புதல

e-RPL விண்ணப்பதாரிகளின் கோரிக்கைகளுக்கு அமைவாக கணிப்பீட்டு நிறுவகங்கள் இடைவெளி நிரப்புதல் செயன்முறைகளை ஒழுங்குசெய்வதுடன் அவற்றின் பொருட்டு அந் நிறுவகங்கள் ஓர் நியாயமான கட்டணத்தினை அறவீடு செய்யும்.




# 6.0 விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் வசதி

ஆன்லைன் மூலம் விண்ணப்பத்தினைச் சமர்பிக்கும் வசதியானது உருவாக்கப்பட்டுள்ளது. e-RPL நடைமுறைப்படுத்துநர்களின் இணையத்தளங்களிற்கு விஜயம் செய்து உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விண்ணப்பதாரிகள் தமது வீடுகளில் இருந்தவாறே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும். அத்துடன் விண்ணப்பமானது கிடைக்கப்பெற்றதும் மேலதிக நடவடிக்கையின் பொருட்டு e-RPL நடைமுறைப்படுத்துநர்கள் விண்ணப்பதாரிகளைத் தொடர்புகொள்வர்.

TVEC

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு
நிபுணதா பியச, இல.354/2, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு - 05

தொ. பே இல. : 011-760 8000
மின்னஞ்சல் : info@tvec.gov.lk
இணையம் : www.tvec.gov.lk

அனுசரணை : International Labour Organization | சர்வதேச தொழிலாளர் தாபனம்